**புதுக்குடியிருப்பு பிரதேசசபை**
**முல்லைத்தீவு மாவட்டம்**
------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 12 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 18 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 05 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் அவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கூட்டுமொத்தம் ரூபா 4,989,659 பெறுமதி காட்டப்பட்டிருந்த சபைக்குரியதான 25 ஆதனங்களின் நியாயமான பெறுமதியினை அவற்றுக்குரிய ஆதன உறுதிப்பத்திரங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன கிடைக்கப் பெற்றிராமையால் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 28,241,175 பெறுமதியான மூலதன வேலைத்திட்டங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்காமையினால் மீளாய்வாண்டுக்குரிய ஆதனங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.3 பெறப்படவேண்டிய வேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) அரசிறைக்கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 10,800,417 பெறுமதியான 03 வகையான அரசிறைகளினை கடந்த 1 வருடத்துக்கு மேலாக அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காது நிலுவையாக விடப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுமொத்தம் ரூபா 120,414 பெறுமதியான தேசத்தை கட்டி எழுப்பும் வரி (NBT) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்காமல் வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

(இ) அலுவலர்களது பதிவியனர் கடன் நிலுவைகளினது கூட்டு மொத்தம் ரூபா 138,228 இனை கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சில்லறைக் கடன் கொடுனர் நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 925,128 இனை தீர்ப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் கடந்த 01 தொடக்கம் 03 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக ஒழுங்கு விதிகள் | |
| (i) பாகம் III விதி 24 | பிரதேச சபை ஸ்தாபிக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் பிரதேச சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III விதி 32 | சபையினால் மீளாய்வாண்டுக்கான ஆதன வரி மதிப்பீடு தொடர்பான மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. |
| (iii) அத்தியாயம் III விதி 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) அத்தியாயம் V விதி 140 | தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்களின் கூட்டு மொத்தம் ரூபா 2,323,888 தொடர்பில் கடந்த 01 தொடக்கம் 06 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் | |
| (i) இலக்கம் 571 | மூன்று வகையான 49 தனித்தனியான காலம் கடந்த வைப்புக்களின் கூட்டு மொத்தம் ரூபா 4,474,687 தொடர்பாக கடந்த 02 தொடக்கம் 04 ஆண்டுகளாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபம் | |
| (i) 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய சுற்று நிருப இல 41/90 | சபையின் 14 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006 ஆம் ஆண்டின பெறுகை வழிகாட்டி கைநூல் | |
| (i) பிரிவு 5.4.12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) சபையினால் செலுத்தப்பட்டபின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கும் அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 36,178,341 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 31,827,810 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 4,350,531 ஆல் அதிகரித்திருந்தமையைக் காட்டுகிறது. மீண்டுவரும் மானியங்கள் மற்றும் மீண்டுவரும் வருமானங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 2.2 நிதிசார் பகுப்பு ரீதியான விளைவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 92,953 விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 69,810 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 23,143 ஆல் அதிகரித்துள்ளமையை காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமிகையின் 71.17 சதவீதமான தொகை அபிவிருத்தி நிதி ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அபிவிருத்தி நிதி ஒதுக்கத்தில் 2.5 சதவீதமானளவு மட்டுமே மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது 01 சனவரி 2016 இலிருந்த நிலுவையில் 2.3 சதவீதத்திற்கு சமனானதாயிருந்தது.

**2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 90,224,775 ஆக விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 59,007,059 ஆகவும் விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 31,217,716 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

**2.4 வருமான முகாமைத்துவம்**

**2.4.1 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை**

சபையினால் சமர்பிக்கப்பட்டிருந்தவாறு மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம், கிடைக்கப்பெற்ற உண்மையான வருமானம் மற்றும் நிலுவையாகவுள்ள வருமானம் என்பன பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உண்மையான வருமானம் | 31 திசெம்பர் 2016 இலிருந்தவாறான திரண்டு வந்த நிலுவை வருமானம் |
|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரிகளும் வரிகளும் | 25 | 205 | - |
| வாடகைகளும் குத்தகைக் கட்டணங்களும் | 13,816 | 16,305 | 360 |
| உரிமக் கட்டணங்கள் | 1,015 | 2,902 | - |
| ஏனைய வருமானங்கள் | 9,598 | 25,133 | 15,168 |
| | **24,454** | **44,545** | **15,528** |

**2.4.2 தொலைத்தொடர்பு கோபுரத்துக்கான கட்டணங்கள்**

17.04.2009 திகதியிடப்பட்ட 1597/8 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 03 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள், மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்களை மீளாய்வாண்டில் உரியவாறு அறவீடு செய்ய சபையால் நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டு மொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவுமில்லை.

**2.4.3 முத்திரைக்கட்டணங்கள்**

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருந்திருக்க வேண்டிய சபைக்குரிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 938,090 இனை கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவீடு செய்ய சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

-------------------------------------

கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) சபையினால் கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக உபயோகிக்கப்பட்டு வந்திருந்த 20 வாகனங்களினை சபைக்குரியதாக உரிமைமாற்றம் செய்யப்பட்டிருக்க நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய 18 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமையினால் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படைந்திருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(இ) கூட்டுமொத்தம் ரூபா 44.54 மில்லியன் பெறுமதியான அபிவிருத்தி நிதி ஒதுக்கம் குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிராது தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

### 3.2 சொத்து முகாமைத்துவம்

-------------------------------

கீழ்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) நிதி ஒழுங்கு விதி இல 756 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையினது அறிக்கையும் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் நாளதுவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) கூட்டுமொத்தம் ரூபா 59.03 மில்லியன் பெறுமதியான நிதி குறித்த நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிராது கடந்த 01 தொடக்கம் 10 ஆண்டுகளாக இரு அரச வங்கிகளில் குறுங்கால நிலையான வைப்புக் கணக்குகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இத்தகைய குறுங்கால வைப்புக்கள் தொடர்பிலான அங்கீகாரம் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் அவ் வைப்புக்களிலிருந்தான மீளாய்வாண்டுக்கான வட்டி வருமானத்தில் 1.68 சதவீத நலிவும் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 3.3 கைவிடப்பட்ட மூலதன வேலைத்திட்டங்கள்

----------------------------------------------------

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ரூபா 58,260,000 பெறுமதியான 17 மூலதன வேலைத்திட்டங்கள் கணக்காய்வுப் பரிசீலனையின்போது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்கு அறியத்தரப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்றிட்ட தாமதங்கள்

-----------------------------

மீளாய்வாண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த 02 செயற்திட்டங்களின் கூட்டுமொத்த பெறுமதி ரூபா 777,691 இற்கான வேலைகள் நிறைவேற்றப்பட்டிராது சில்லறைக்கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்குகளில் ரூபா 777,691 மூலதன செலவினமாக காட்டப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை இத்தகைய வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏவையும் மேற்கோள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.5 திண்மக்கழிவு முகாமைத்துவம்.

--------------------------------------

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகளை மட்டுமே சபையால் மேற்கொள்வதேயன்றி கொம்பொஸ்ட்

மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கப்படவில்லை.

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட்டிராமையும் மதிப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையாலேயுமே மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 39,710 தொடக்கம் ரூபா 1,543,682 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன 2006 ம் ஆண்டு பெறுகை வழிகாட்டி கைநூலின் பிரிவு 4.2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம்

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் 09.06.2009ம் திகதிய கணக்காய்வு முகாமைத்துச் சுற்றுநிருப இல DMA/2009 (1) இன் பிரகாரம் சபையின் செற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டில் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய கூட்டமொன்று மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் விடயங்கள் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) வருமான சேகரிப்பு
(ii) நிலையான சொத்துக்கள்
(iii) கணக்கீடு
(iv) ஆளணி வெற்றிடம்
(v) வாகனங்களின் பயன்படுத்துகை
(vi) நானாவித வைப்புக்கள்
(vii) பாதீட்டுக்கட்டுப்பாடு
(viii) பெறுகை நடைமுறை